மலர்: 18 இதழ்: 8
ஆகஸ்ட் 2018
Date of Publication
25th day of Every Month
தனிப்பிரதி விலை: ₹ 15/-

செங்குந்த மித்திரன்

திருநெல்வேலி

V.S.சங்கரசுப்ரமணிய முதலியார்

செங்குந்தர் குலதிலகம்

வி.எஸ்.எஸ்.

நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் 04.10.1902ல் திரு. சுப்பிரமணிய முதலியாருக்கும் திருமதி. முத்தமாளுக்கும் திருமகனாகப் பிறந்து வளர்ந்து வீரவநல்லூர் இந்து நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு வரையிலும் நெல்லை சி.எம்.சி. சாப்டர் உயர்நிலைப் பள்ளியில் இடைநிலை வகுப்பு முடித்தும், சென்னை கிறித்துவக் கல்லூரியில் 1925ல் பி.ஏ., பட்டமும், 1928ல் சட்டக் கல்லூரியில் பி.எல்., பட்டமும் பெற்றவர். வான சாஸ்திரம், சோதிடம் போன்ற கலைகளையும் நன்கு பயின்று தேர்ச்சி பெற்றவர். கல்லூரியில் படித்த காலத்தில் இராணுவப் பயிற்சி பெற்றும், துப்பாக்கி சுடும் பயிற்சியில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

பள்ளி மாணவராக இருக்கும் போதே தேசிய பற்றோடு திலகரின் விடுதலை நிதி திரட்டியும், 1921ல் திரு. டி.ஆர். மகாதேவஅய்யருக்கு உறுதுணையாக இருந்து அம்பை வட்டாரத்தில் பெருமளவில் உறுப்பினர்களைச் சேர்த்தவர். நெல்லையில் வழக்கறிஞராக பணியாற்றிய ஆரம்பத்திலேயே (1930) இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். காந்தி மகானின் கவனத்துக்கு நெசவாளர்களின் பிரச்சனைகளை கொண்டு சென்ற குழுவின் மூன்று உறுப்பினர்களில் 28 வயதே நிரம்பிய திரு VSS அவர்களும் ஒருவர்.

தனது 15ஆவது வயதிலேயே (1917)ல் வீரவநல்லூரில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தை தோற்றுவித்து, திரு.M.K.ஆறுமுக முதலியார் அவர்களை தலைவராகவும் தான் உட்பட 22 செங்குந்தர்களை உறுப்பினர்களாக்கி சங்கத்தை 1923ல் பதிவு செய்திருக்கிறார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தோற்றுவித்த காலத்திலும், 08.12.1938ல் சங்கத்தை பதிவு செய்தபோது அதன் 67 செயற்குழு உறுப்பினர்களில் இவரும் ஒருவராகவும், சென்னை மயிலாப்பூரில் நடந்த மூன்றாவது செங்குந்தர் வாலிபர் மாநாட்டின் வராகவும் குறிஞ்சிப்பாடி செங்குந்தர் வாலிபர் 10ஆவது மாநில மாநாட்டின் தலைவராகவும், அம்பையில் நடைபெற்ற செங்குந்தர் வாலிபர் மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவராகவும் இருந்து திறம்பட செயல்பட்டுள்ளார்.

1932ம் ஆண்டு சுதந்திர போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்றதோடு அந்நிய துணிகள் பகிஷ்கரிப்பு, கள்ளுக்

கடை மறியல் போன்ற போராட்டங்களிலும் ஈடுபட்டார். 1933 முதல் 1940 வரை சுதேசி பொருட்காட்சியை ஸ்ரீ நெல்லையப்பர் ஆனி தேரோட்டத் திருவிழாவின்போது நடத்தியுள்ளார்.

1937 - 1938ல் நடைபெற்ற நகர் மன்றத் தேர்தலில் நெல்லை, மேலப் பாளையம், பாளையங்கோட்டை உள்ளிட்ட நெல்லை நகர சபைத் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார். நெல்லை நகர காங்கிரஸ் குழுவின் தலைவராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிலும் பணியாற்றியுள்ளார். சுதேசி நற்சான்றுக் குழுவின் செயலாளராகவும் 1938 முதல் 1942 வரை நெல்லை மாவட்ட போக்குவரத்துக் குழுவில் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். திரு.VSS அவர்கள் நகர் மன்ற தலைவராக பணிசெய்த காலத்தில் அவர் செய்த முக்கிய பணிகள்.

1. தற்போது இயங்கும் நெல்லை நகர் மத்திய பேருந்து நிலையம் அமைத்தது.
2. நெல்லை புகைவண்டி நிலையத்திலிருந்து பேருந்து நிலையத்திற்குச் செல்லும் சுற்றுப்பாதைக்கு மாற்றாக தனது நண்பர் த.மு.சாகிப் அவர்களிடமிருந்து நகராட்சிக்கு இலவசமாக இடத்தைப் பெற்று த.மு. சாலை என நேர் பாதையினை அமைத்தது.
3. நகரின் வீதிகளை விரிவுபடுத்தியது.
4. நகரில் கழிவு நீரோடைகள் அமைத்தது.
5. முதன் முதலாக சிமெண்ட் சாலை அமைத்தது.

வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் போது கைதாகி 21.02.1943 முதல் 01.04.1945 வரை இரண்டாண்டுகளுக்கு மேல் வேலூர், தஞ்சை சிறையில் அடைபட்டு இடர் நிரம்பிய வாழ்வை அனுபவித்துள்ளார்.

1945ல் சென்னை மாகாண சட்ட மன்றத் தேர்தலில் பாளையங் கோட்டை தொகுதியில் திரு.VSS அவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இந்திய ஜவுளிக் கட்டுப்பாடு வாரியத்தின் தமிழகப் பிரதிநிதியாகவும், 1946 - 1952ல் சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினராகவும், 1949ல் கைத்தறித் தொழில் பாதுகாப்பு மாநாட்டில் தலைமை தாங்கி தொழில் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் 1958ல் திருநெல்வேலிபேட்டை நகரில் முதல் தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை அமைய அப்போதைய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.M.P.நாச்சிமுத்து செங்குந்தர் அவர்களுக்குத் துணையாக நின்றும், நூற்பாலை இயக்குநராகவும் சட்ட ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்கள். கைத்தறி நெசவாளர்கள் நூற்பாலையில் வேலை பெறுவதற்கு மிகுந்த உதவியாக இருந்துள்ளார்கள். இந்த நூற்பாலையைத் தொடர்ந்து தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

1965ம் ஆண்டுக்குப் பின்னர் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றார். திரு.வி.எஸ்.எஸ். அவர்கள் தமது 74ஆவது வயதில் 08.09.1976 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

- **பழ.மாணிக்கவாசகம்**, தலைவர்,
செ.ம.ச.திருநெல்வேலி மாவட்டம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க முன்னோடி

செங்குந்த மித்திரன் முதல் ஆசிரியர்



காஞ்சி நாகலிங்க முனிவர்

முனிவர் அவர்கள் 1864ஆம் ஆண்டு ரக்தாட்சி தமிழ் ஆண்டில் ஐப்பசித் திங்கள் 8-ம் நாள் காஞ்சீபுரத்தையடுத்த ஏகனாம் பேட்டையில் பிறந்தார். அவரது தகப்பனார் வாலாஜாபாத் மிலிடரி பாடசாலையில் ஆசிரியராக இருந்த சரவணப்பெருமாள் முதலியார், தாயார் மனோன்மணி அம்மையார்.

முனிவர் தமது 5-ம் வயதில் தமது தந்தையின் மாணவர் கச்சபாலய தேசிகரிடம் கல்வி பயில ஆரம்பித்தார், பின்னர் தமது தகப்பனார் இறந்து விடவே அண்மையில் அய்யம் பேட்டையிலிருந்த தமது பாட்டியார் வீட்டிலிருந்து கொண்டு வள்ளுவப் பாக்கம் சீனிவாச முதலியாரிடம் படித்துவந்தார்.

பன்னிரண்டாம் ஆண்டில் முனிவர் நம் குலத்தொழிலாகிய நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின்னர், சென்னை கமிசேரியட் ஆபீஸ் மானேஜராக இருந்த (இரங்கூன் முருகேச முதலியார் பேரன்) ஐயம்பேட்டை பஞ்சாட்சா முதலியாரால் சென் னைக்கு அழைக்கப்பட்டுப் பின்னர் சென்னையிலே தங்கிவிட்டார். சென்னையில் இவரை வளர்த்தவர் மித்திரனின் முன்னாள் ஆசிரியர் த.சண்முகசுந்தர முதலியார் அவர்களது பாட்டனார் புஜங்கராய முதலியார்.

புஜங்கராய முதலியாரின் மனைவி யும் முனிவரின் தாயாரும் உடன் பிறந்தவர்கள், சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலம் கற்று வரும் சண்முகசுந்தர முதலியார் குடும்பத் திலிருந்து வந்த முனிவருக்கு ஆங்கிலம் கற்க பல வசதிகளிருந்தும் முனிவர் அவர்கள் தமிழையே விரும்பி, அஷ்டாவதானம் பூவை கல்யாண சுந்தர முதலியார் அவரிடம் சைவபுராணங்கள் திருக்குறள் முதலிய நூல்களையும் கயிலை சண முகம் பிள்ளையிடம் இராமாயணமும் ராயபுரம் ஜக்காராவ் முதலியாரிடம் நன்னூலும் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடம் (பிற்காலத்தில் கருவாடுதுறை ஆதினத்துப் பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்) சிவதத்துவ விவேகமும், பயின்றார்.

காஞ்சிபுரம் உபய வேதாந்தம் முத்துக்கச்சபேஸ்வர சிவாச்சாரிய ஸ்வாமிகளிடம், 21ம் வயதில் சமய விசேட தீக்கைகளும் 25ம் வயதில் திருவரமத்தூர் தண்டபாணி சுவாமிகளிடம் கௌமார தீக்கையும் பெற்றார்.

முனிவர் அவர்களிடம் 20ம் வயதில் சென்னையில் முதன் முதலாகத் திருமழிசை தணிகாசல முதலியார் வீட்டில் தோற்றுவிக்கப் பெற்ற சைவ சித்தாந்த சபை கூட்டங்களுக்குத் தவறாமல் சென்று வருவார். பின்னர் சென்னை சிவனடியார் கூட்டத்தை ஆரம்பிப்பதில் முனிவரும் பெரும் பங்கு கொண்டார். சென்னை அருணாசலேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நிறுவப்பட்டிருந்த மெய்க்கண்ட சத்தான சபையின் துணைத் தலைவராக பல ஆண்டுகளிருந்தார். இச்சபையின் ஆதரவில் தேவார பாடசாலை ஒன்றையும் நடத்தி வந்தார். சைவசித்தாந்த போதனை செய்வதற்காக முனிவர் ஏற்படுத்திய மெய்கண்டான் கல்லூரியையும் முனிவர் இம்மண்டபத்திலேயே நடத்தி வந்தார். அருணாசலேஸ்வரர் கோயிலில் உள்ள அணி அண்ணாமலைக் கோயிலின் உஷக்கால பூசையை முனிவர் நடத்தி வந்ததுடன் அக்கோயிலின் கோபுரத் திருப்பணி வேலையிலும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்.

முனிவர் அவர்கள் சென்னையில் அருணாசலேஸ்வரர் கோயில் தெருவில் அச்சகம் ஒன்று நிறுவி அதன் மூலம் பல தமிழ் நூல்களை வெளியிட்டார்.

முனிவரது காலத்திலிருந்த தமிழ் அறிஞர்கள் அனைவரும் முனிவருக்குத் தெரிந்தவர்களே. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய ஜமீன்தார் பாண்டித்துரை தேவர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் முனிவர் சிவ ஞானபோத சிற்றுரையினை வெளியிட்டார். சிவ ஞான போதம் உள்ளிட்ட சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கினையும் உரையுடன் ஒரு தொகுதியாகச் சேர்த்து திருவாவடுதுறை ஆதீன மரபின்படி மெய்கண்ட சாத்திரம் என்ற பெயர் தந்து முனிவர் வெளியிட்டார். சைவ சித்தாந்தத்தைப் பற்றிய தெளிவான வேறெந்த நூல் இதுவரையும் வெளிவரவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இந்நூலை வெளியிட்ட காரணத்தினால் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர், முனிவருக்கு 'மெய் கண்ட சாத்திரப் பிரசாரகர்' என்ற பட்டத்தினை வழங்கினார்.

திருப்பணந்தாள் காசி மடாலயத்திற்கும் தொடர்புண்டு. மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் உதவி கொண்டு 'திருவுந்தியார்' 'திருக்களிற்றுப் படியார்' என்னும் நூல்களை வெளியிட்டார்.

மேற்சொன்ன நூற்கள் தவிர முனிவர் திருத்தணிகை வண்ண மஞ்சரி, தென் கடம்பன் பதிற்றுப் பத்தந்தாதி, வடபழனி மயிலேறு பெருமாள் மாலை இரட்டை மணி மாலை, திருவாமாத்தூர் வண்ணங்கள், திருவெறும்பியூர் புராணம் இவைகளை இயற்றியுள்ளார். தாயுமானவர், பன்னிருதிருமுறை, காஞ்சி புராணம், காஞ்சி கட்டளைக் கலித்துறை புராணம், திருப்புகழ், சுந்தரர் தேவாரம் செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, காரனேஷன் தமிழ்

சேரியில் நாகை நல்லமுத்து முதலியார் தலைமையில் ஒரு மகாநாடு கூடிற்று.

இம்மகாநாட்டிற்கு முனிவரும் சென்றிருந்தார். சென்னையில் சமூக நன்மைக்காக உழைக்கக்கூடிய சங்கம் ஒன்றை நிறுவி பத்திரிக்கை ஒன்றையும் நடத்த வேண்டுமென தீர்மானித்து 1927ல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை நிறுவி, இப்போது தொடர்ந்து நடைபெறும் இச்செங்குந்த மித்திரன் பத்திரிகையையும் ஆரம்பித்தார்.

1921ல் செங்குத்தன் என்று ஆரம்பித்து பின்னர் செங்குந்த மித்திரன் என்ற பெயரில் வார இதழாக வந்து சில மாதங்கள் வந்தது

மித்திரனின் ஆசிரியராகிய முனிவரே 1927ல் ஆரம்பிக்கப்பட்ட செங்குந்த மித்திரனுக்கும் முதன் முதலாக ஆசிரியராக அமர்ந்தார். தாம் வித்திட்ட செங்குந்தர் இயக்கமும் செங்குந்த மித்திரனும் சில மாதங்களுக்குள் நன்கு வளர்ச்சியடைவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து முனிவர் அவர்கள் தமது ஆசிரியர் பதவியை தமது சிறிய தாயின் பேரன் ம.சண்முகசுந்தர முதலியார் M.A.L.T., அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டபோதிலும், தமது மரணத்தருவாய் வரையிலும் நமது இயக்கத்தில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

1918ல் முனிவர் அவர்களால் காஞ்சிபுரம் ம.த.சாமிநாத முதலியார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நம் இயக்கம் 1927ம் ஆண்டு முதல் நிரந்தரமாக இருந்துகொண்டு சமூகசேவை செய்து வருகின்றது.

இல்லறத்தைத் துறந்தும் சமூகத்தைத் துறவாது, உறங்கிக் கொண்டு சிதறிக்கிடந்த செங்குந்தர்களை ஒன்றுதிரட்டி நமது தலைச் சங்கத்தையும் மித்திரனையும் தோற்றுவித்த முனிவர் 9-7-1950ம் நாள் ஞாயிறன்று காலை முக்தி அடைந்தார்.

முனிவர் அவர்கள் ஒழுக்கத்திற்கும் தூய்மைக்கும் உறைவிடம்,

அகராதி முதலிய பல புத்தகங்களை முனிவர் அச்சிட்டு வெளியிட்டார்.

முனிவர் அவர்கள் காஞ்சீபுரம் ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனத்தில் 1926ம் ஆண்டுக்கு முன்னர் துறவறம் பெற்றார். துறவறத்திற்குப் பின்னர் காஞ்சி நாகலிங்க முதலியார் என்னும் பெயர் மருவி காஞ்சி நாகலிங்க முனிவர் என அழைக்கப்பட்டார்.

முனிவர் அவர்களுக்குக் காஞ்சீபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் அவர்களால் 'கச்சியடிகள்' என்ற பட்டமும், திருவாவடுதுறை ஆதீனம் மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண சுவாமிகள் அவர்களால் "மெய்கண்ட சாத்திரப் பிரசாரகர்" என்ற பட்டமும் இலங்கை ஸ்ரீ பொன்னம்பல பிள்ளையவர்களால் 'காஞ்சி மகாநாட்டு வித்யாபிரசாரகர்' என்ற பட்டமும் திருவாமாத்தூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் அவர்களால் 'வண்ணக்களஞ்சியம்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.

முனிவர் அவர்கள் இளமை முதல் தமது இறுதி நாள் வரையில் சமூக முன்னேற்றத்திற்காக உழைத்து வந்தார். பண்டை நாளில் மகாநாடு, கிளை நாடு என்ற திட்டத்தின் கீழ் தென்னாடு முழுவதும் பரவியிருந்த செங்குந்தர்களை ஒன்றுபடுத்திய திட்டம் நாளடைவில் மறைந்து ஆங்காங்குள்ள செங்குந்தர்கள் ஒரே இனத்தவர் என்ற உணர்ச்சி யற்றுவரும் நாளில் முனிவர் அவர்கள் தற்காலத்திற் கேற்றவாறு திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் செங்குந்தர் இயக்கத்தை ஆரம்பித்தார். இயக்கத்திற்கு ஆதரவாக 1921ம் ஆண்டிலேயே 'செங்குந்தன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

பின்னர் செங்குந்தனின் பெயரை மாற்றி செங்குந்த மித்திரன் என்ற பெயரில் பத்திரிகையை முதன் முதலாக வெளியிட்டார்.

செங்குந்தன் பத்திரிகை ஆரம்பிப் பதற்கு முன்னாலேயே 9-6-1918ல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்ற ஒரு சங்கத்தை நிறுவு வதற்கும் மாகாணம் எங்கும் உள்ள செங்குந்தர்கள் மகாநாடு கூட்டு விப்பதற்கும் சென்னை மைலாப்பூர் வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் செங்குந்தப் பிரமுகர்கள் கூட்டம் ஒன்றை முனிவர் கூட்டினார். கூட்டத்திற்கு போஸ்டல் ஆடிட் ஆபிஸ் வேலு முதலியார், பிங்கர் பிரிண்ட் ஆபீஸ் மானேஜர் குழந்தை வேலு முதலியார், மா.அ.கனகசபை முதலியார், சுவாமி உருத்திர கோட்டீஸ்வரர் முதலிய பிரமுகர்கள் வந்திருந்தனர்.

கூட்டத்தில் சங்கம் நிறுவப்பெற்று மகா நாட்டிற்கான வரவேற்புக்குழுவும் அமைக்கப்பட்டது. இடையில் காஞ்சீபுரம் ம.த.சாமிநாத முதலியார், பி.செ.முருகேச முதலியார், சென்னை பச்சையப்பன் கல்லூரி பிரின்ஸி பாலும், கணிதப் பேராசிரியருமான S.P.சிங்காரவேலு முதலியார் B.A.L.T., இவர்கள் முயற்சியால் காஞ்சீபுரம் கச்சபேசர் ஆலயத்திலும் ஓர் கூட்டம் கூடி சமூக முன்னேற்றத்தைப்பற்றி ஆலோசித்தது. பின்னர் கொல்லங் கோட்டில் பெரிய வீடு முத்துக் குமாரசாமி முதலியார் முயற்சியால் பழனி பாத்திரக்கடை குழந்தைவேலு முதலியார் (K.ஆறுமுக முதலியாரின் தந்தை) தலைமையில் ஒரு மகாநாடு கூடிற்று. அடுத்தாற்போல் நாகப் பட்டினத்தையடுத்த பொருள்வைத்த

நூற்றாண்டு பிறந்தநாள் விழாக் காணும் 'பல்கலைச்செல்வர்', 'தமிழ்மாமணி'

டாக்டர் திரு. ந. கோவிந்தசாமி

'டாக்டர் திரு. ந. கோவிந்தசாமி செங்குந்தர் அவர்களைப் பற்றி....

பிறந்தநாள் : 18-01-1919

பெற்றோர் : தெய்வத்திரு.நடராஜ முதலியார்-உண்ணாமுலை அம்மாள்

அறிந்த மொழிகள் : தமிழ், ஆங்கிலம், தெலுங்கு

குடும்பம் :

துணைவியார்: திருமதி. பட்டம்மாள் மகள்: திருமதி.சரோஜா மருமகன்: டாக்டர்.ப.திருநாவுக்கரசு, மேலாண் இயக்குநர்-ஆனந்தா நிறுவனங்கள், பேரன்: திரு.தி.இராஜ ராஜன் பொறியாளர், திருமதி.துர்கா இராஜராஜன், பேரன்:திரு. தி.அருள்குமரன் சமையற்கலை, ஹோட்டல் நிர்வாகம் கொள்ளு பேத்தி: மீரா, பேரன்:கணபத்.

வகிக்கும் பதவிகள்

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் புரவலர் புதுவைச் செங்குந்தர் கல்வி, நலச் சங்கத்தின் சிறப்புத் தலைவர், புதுச்சேரி மாநிலச் செங்குந்தர் சங்கத்தின் தலைவர், கம்பன் கழகத் தலைவர், ஆனந்தா நிறுவனங்களின் தலைவர்.

வகித்த பதவிகள்

வணிக அவைத் தலைவர் - ரோட்டரி சங்கத்தின் தலைவர், (சார்டெட் உறுப்பினர்) புதுவை மாநிலக் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர், புதுவை மாநிலக் கூட்டுறவு வங்கியின் தலைவர், புதுவை கூட்டுறவுத் துறை அச்சகத்தின் தலைவர், புதுவை தமிழ்ச் சங்கத்தின் சிறப்பு தலைவர், அகில இந்திய வானொலி குரல் தேர்வுக் குழு உறுப்பினர், புதுவை மைய பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக்குழு உறுப்பினர், புதுச்சேரி தொழுநோய் நிவாரண குழுத் தலைவர், புதுவை மாநில ஓவியக்கலைஞர் நிறுவனப் புரவலர், புதுச்சேரி மாநில திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர், Pondicherry Special Police Officer, புதுவை கூட்டுறவுத் துறை நிறுவனங்களின் ஆலோசனைக் குழு உறுப்பினர், பிரெஞ்சு இந்திய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினர்.

சிறப்புப் பட்டங்கள்

தமிழ்மாமணி, பல்கலைச்செல்வர், சேவா ரத்னா, பொதுப்பணிச்செல்வர், கம்பன் காவலர், கம்பன் கவிரத்னா, கம்ப பாவாணர், கர்ம யோக சிரோன் மணி, தமிழறிஞர், சித்த மருத்துவர், பல்கலைத்திலகம், பாவேந்தருடன் இருந்த சான்றோர் விருது

சென்ற அயல்நாடுகள்

லண்டன், பெல்ஜியம், ஹாலந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இலங்கை, நார்வே, சுவீடன், டென்மார்க், ஜெனிவா, வெனீஸ், இத்தாலி, நேபிள்ஸ், சுவிட்சர்லாந்து

கல்விப் பணியில் ஒரு செங்குந்த மணிமகுடம்

Dr.V.முருகேசன் செங்குந்தர்

பேராசிரியர் உயர்திரு. V.முருகேசன் அவர்கள் 15-06-1951 அன்று நாமக்கல் மாவட்டம் கந்தம்பாளையத்தில் திரு. வேலாயுதம் செங்குந்தர் - திருமதி. வள்ளியம்மாள் ஆகியோருக்கு மூன்றாவது குழந்தை யாகப் பிறந்தார். உடன்பிறந்தவர்கள் 2 ஆண், 2 பெண்.

இவர் தனது இளங்கலை படிப்பை முதல் வகுப்பில் செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி யிலும் தனது முதுகலை படிப்பை லயோலா கல்லூரி, சென்னையிலும் முடித்தார். தனது M.Phil படிப்பை சென்னை பல்கலைக்கழகத்திலும் Ph.D படிப்பை அண்ணா பல்கலைக் கழகத்திலும் முடித்தார். V.முருகேசன் அவர்களுக்கு PITTSBURGH - USA பல்கலைக்கழகம் ஒரு வருட முனை வர் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

இவர் பரிசோதனையாளர், இணை விரிவுரையாளர், விரிவுரையாளர், துணை பேராசிரியர் மற்றும் முழு நேர பேராசிரியராக 1996ஆம் ஆண்டு தனது சேவையை தொடங்கினார். இவர் அண்ணா பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையின் தலைமை பேராசிரியராக 7 வருடம் பணியாற்றி னார். அப்போது தனது தலைமையின் கீழ் பல அரசு மற்றும் தனியார் உதவி களை கொண்டு திரட்டிய மானியங் களை வைத்து வேதியியல் துறையை சீர்படுத்தும் முயற்சியில் பல ஆலோச னைகளையும், ஆய்வுகளையும், சோதனைகளையும் மேற்கொண்டு அந்தத் துறையின் மேம்பாட்டிற்காக பாடுபட்டு உள்ளார்.

இவர் தலைமையின் கீழ் அதிநவீன உபகரணங்கள் மற்றும் அதிகப் படியான ஆதரவுகளும் DST, FIST, UGC-SAP மற்றும் தமிழ்நாடு அரசின் P&D துறையிடம் இருந்து பெற்று தந்து அத்துறையை மேம்படுத்தினார்.

(டீன்) கல்வி தலைவர் பேராசிரியர் உயர்திரு. V. முருகேசன் அவர்கள் ஒரு மனிதநேயமிக்க பட்டதாரி ஆசிரியராக இருந்து இளங்கலை மற்றும் முதுகலை பாடத் திட்டங்களை வாழ்வியல் திருத்தங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்க அரும்பாடுபட்டார்.

40 வருட கற்பித்தல் அனுபவத் தையும், 30 வருட ஆராய்ச்சி அனுபவத்தையும் பெற்றவர். அவரு டைய பிரதான ஆராய்ச்சி என்பது (PORUS CATALYTIC MATERIALS FOR FINE CHEMICAL SYNTHESIS) நேர்த்தியான இரசாயன சேர்க்கை கொண்ட நுண்ணிய கடலைடிக் பொருள்கள், குறைக்கடத்தி போட்டோகேடலைடிக் மிசோபோரஸ் மற்றும் நானோ வடிவ பொருள் மூலம் மாசுபாடு குறைக்கவும், கரிம வேதியியலில் மேம்படுத்தவும் பல ஆய்வுகளை செய்து உள்ளார்.

35 அறிஞர்கள் முனைவர் பட்டங்களையும், பலர் முதுகலைப் பட்டங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரை களையும் வெளியிட உறுதுணையாக வும், மேற்பார்வையாளராகவும் இருந்து அவர்களின் திறமைகளை ஊக்குவித்துள்ளார். தன்னிகரில்லா ஆசிரியர் பணிக்காக தன்னையே முழுவதும் அர்ப்பணித்துள்ளார்.

இவர் SCI பத்திரிகையில் 230க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பல ஆலோசனை கூட்டங்களையும் நடத்தியுள்ளார். இப்பொழுது இவர் தனது அளவிட முடியாத ஆராய்ச்சி சான்றுகளை தனது SCOPUS INDEX-இல் வெளியிட்டு வருகிறார்.

ஆராய்ச்சி மேலாண்மை மற்றும் மேற்கோள் காட்டல் போன்ற ஆராய்ச்சி கட்டுரைகளுக்காக இவருக்கு 2012ஆம் ஆண்டின் "THE THOMSON ROUTERS INDIA" விருது வழங்கப்பட்டது. இவருக்கு ஜப்பான் நாட்டின் மிக கவுரவமாக கருதப்படும் "STA & JSPS" தோழமை விருது கொடுத்து ஜப்பான் அரசு சிறப்பித்துள்ளது.

நுண்ணிய பொருள் மற்றும் அதன் அதி நவீன நுண்ணிய பொருள் ஆராய்ச்சியில் இவரது குறிப்பிடத்தக்க பங்கை நினைவு கூறும் விதமாக இவரது 65வது பிறந்தநாள் விழாவில் ஒரு பத்திரிகை அதனை பற்றிய முழு செய்திகளையும் வெளியிட்டது. ஆராய்ச்சித் துறை மட்டுமின்றி "UGC, AICTE, DST, CSIR, TNSC & ST" மற்றும் அறிவியல் நகரம் போன்ற சட்ட ரீதியிலான துறையிலும் இவரது பங்கு அளப்பரியது.

இவரது கட்டுரைகள் பதிப்புகள் மற்றும் இவரது அறிவுசார் மேம்பாடு கள் அனைத்தும் இந்தியாவின் பல மாநில பல்கலைக் கழகங்களில் மட்டுமின்றி சர்வதேச ஆராய்ச்சி அமைப்பின் கீழ் ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கொரியா, தைவான், ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலும் வெளியாகி யுள்ளது. இவர் பல மேலை நாடுகளின் துணை கொண்டு பல கருத்து பரிமாற்ற மாநாடுகளிலும், சர்வதேச மாநாடுகளிலும் கருத்து பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டு உள்ளார். இவர் ஒரு செதுக்கப்பட்ட மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச ஆராய்ச்சியாளராக கருதப்படுகிறார். இவர் பொது மற்றும் அரசு சார்ந்த பல ஆராய்ச்சிகளையும் பல சர்வதேச மாநாடுகளையும் தனி சிறப்புடன் நடத்திக் காட்டியுள்ளார்.

இவர் பல சர்வதேச பத்திரிகை களில் இதழாசிரியராக பணியாற்று கின்றார். இந்தியா மற்றும் பல வெளிநாடுகளின் தொழில்முறை அங்கங்களில் இவர் உறுப்பினராக உள்ளார். நமது நாட்டின் பல பல்கலைக்கழகங்களில் கல்வியியல் உறுப்பினராக இருந்து அறிவு செறிந்த பல மாற்றங்களை தந்து உள்ளார்.

இவர் 4 வருட மத்திய ஆராய்ச்சி கழகத்தின் இயக்குனராக பணிபுரிந்து அண்ணா பல்கலைக்கழகத்தில் பல மேதைகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இவர் அண்ணா பல்கலைக்கழகத்தில் மாண்புமிக்க பேராசிரியர், விரிவுரையாளர், சீரிய ஆலோசகர் ஆவர். இவரது பணி நிறை வுக்கு பிறகு சென்னையில் உள்ள "SPONSORED RESEARCH & CONSUL TANCY" B.S.ABDUR RAHMAN CRESCENT UNIVERSITY, பதிவாளராக, சட்ட ஆலோசகராக, மற்றும் இயக்குனராக ஐந்து வருடம் பணியாற்றினார். •

மலர்:19 இதழ்: 3
மார்ச் – 2019
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/-

செங்குந்த மித்திரன்

செங்குந்தர் குலச் செம்மல்
டாக்டர். ந. கோவிந்தசாமி செங்குந்தர்

திருப்பத்தூர் பெரியவர் திரு.கா.அ.சண்முக முதலியார்

வேலூர் மாவட்டம் நூல் மற்றும் கைத்தறித் துணை வாணிகத்தில் சிறந்து விளங்கிய திருப்பத்தூர் அருணாசல முதலியாருக்கும். துணைவியார் முத்துவேடியம்மாள் ஆகியோருக்கும் பார்த்திப வருஷம். ஐப்பசி மாதம் 18ந் தேதியில் 2-11-1885ல் சண்முக முதலியார் தோன்றினார். இவருக்குப்பின் ஆண் மக்கள் இருவர். பெண் மக்கள் மூவர் பிறந்தனர்.

இளமையில் கல்வி:

சண்முகருக்கு 5 ஆண்டுகள் நிறைந்த பின்னர். அவரை திருப்பத்தூர் ஆஞ்சநேயர் கோவில் நாகப்ப நாயுடு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தனர். அங்கு சில காலம் பயின்றார். மாரியம்மன் கோவில் பள்ளியில் சில ஆண்டுகள் படித்தார். பின்னர் சாமிசெட்டித் தெருவில் உள்ள கல்யாணராமய்யர் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து பல ஆண்டுகள் படித்தார்.

பொதுத்தொண்டு:

1915ம் ஆண்டில் திருப்பத்தூரில் முதன்முதலாக பெஞ்ச் மாஜிஸ்திரேட் கோர்ட் அமைந்த போது. திரு.சண்முகனார் அவர்கள் கௌரவ மாஜிஸ்ட்ரேட் ஆக நியமிக்கப்பட்டார். 5 ஆண்டுகள் அப்பணியாற்றிய பிறகு. 1920ல் முதல் வகுப்பு பெஞ்ச் மாஜிஸ்ட்ரேட் ஆக நிமனம் பெற்றார்.

ஜில்லா போர்டு - நகர் மன்றம்

1924ல் அப்பதிவியிலிருந்து விலகி. ஜில்லா போர்டு உறுப்பினர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். 1927ல் திருப்பத்தூர் நகர மன்றத் துக்கு ஓர் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். அந்த ஆண்டிலேயே நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப் பட்டார். 1930ல் திருப்பத்தூரில் "பிளேக்" என்னும் கடும் நோய் ஏற்பட்டு. மக்கள் எல்லோரும் வெளியூர் சென்று விட்டனர். தலைவர் என்ற முறையில் இவர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எல்லாம் சென்று தேவையான உதவிகளைச் செய்தார். 1933ல் மீண்டும் நகர் மன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

தாலுகா போர்டு

1930ம் ஆண்டு முதல் திருப்பத்தூர் தாலுகா போர்டில் அங்கம் வகித்து வந்தார். 1933ல் தாலுகா போர்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1933ல் ஜில்லா போர்டு தேர்தலிலும் நின்று வெற்றி பெற்றார். 1936ம் ஆண்டுடன் ஜில்லா போர்டு உறவு முடிந்தது.

...ந்தீயக் கொள்கையில் பற்று

சண்முகர் தமது மணிவிழா ...னைவாக காந்தி கட்டட நிர்மாண ...றக்கட்டளை நிறுவி, அதற்கு ...யில்வே ரோடில் உள்ள தனது 0.80 ...சண்ட் நிலத்தை நன்கொடையாகக் ...காடுத்தார். காந்தியடிகளின் ...காள்கைகளைப் பரப்ப கால்கோள் ...சய்யு முகத்தான், இலவச திருமணம், ...ால் நூற்பு வேள்வி, இந்த கலாசாரப் ...ரச்சாரம் போன்றவை நிகழச் ...சய்தார். அன்று அவர் கொடுத்த 0.80 ...சண்ட் நிலம் இன்று ஒரு கோடி ...பாய் மதிப்பு பெறும்.

...ட்டமன்றம்

1937ஆம் ஆண்டில் சென்னை ...ாநிலச் சட்டப்பேரவைக்கு காங்கிரஸ் ...ட்சியின் சார்பாக சண்முகனார் ...அவர்கள் வேட்பாளராக நிறுத்தப் ...பட்டார். நீதிக்கட்சி சார்பாகவும் மக்கள் ...கட்சி சார்பாகவும் இரு வேட்பாளர்கள் ...போட்டியிட்டனர். மும்முனைப் ...போட்டி. மூன்று மாதங்கள் தேர்தல் ...வேலைகள் நடைபெற்றன. பெருவாரி ...யான வாக்குகள் பெற்று சண்முகனார் ...வெற்றி பெற்றார். காந்தியடிகளின் அறப்போராட்டம் காரணமாக நாட்டில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனால் 1941ல் சட்டப் பேரவை அரசால் கலைக்கப்பட்டது.

நூற்பு ஆலைகளில்-பங்கேற்பு

20ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் கோயம்புத்தூரில் நூற்பு ஆலைகள் தொடங்கப்பட்டன. 1924ம் ஆண்டு கோவையில் தொடங்கப்பட்ட ஸ்ரீரங்கவிலாஸ் மில்லில் சண்முகனார் பங்குதாரராகச் சேர்ந்து டைரக்டராகவும் ஆனார். பின்னர் பயனீர் மில்லிலும் பங்குதாரர் ஆகி டைரக்டர் பதவி வகித்தார். திருப்பூரில் ஆலை அமைக்க ஆவன செய்தார். அந்த மில்லில் பல ஆண்டுகள் டைரக்டராகவும் இருந்தார்.

நூற்பு ஆலைகளின் தொடர்பு இருந்ததால், நூல் வியாபாரத்தை குடியேற்றத்தில் தொடங்கினார். அவ்வூர் செங்குந்தர்கள் பலரோடு சேர்ந்து "கலைமகள் பருத்தி அரைவை ஆலை" தொடங்கினார்.

திருமகள் நூற்பு ஆலை - நிருவாகத் திறமை

குடியேற்றத்தில் ஒரு நூற்பு ஆலை தொடங்கினால் நல்ல இலாபம் வரும் என்று அறிந்த சண்முக முதலியார் ஏராளமான செங்குந்த பிரமுகர்களோடு தொடர்பு கொண்டு - திருவாரூர் வள்ளல் சபாபதி முதலியார், காஞ்சி நாகலிங்க முனிவர் முதலியவர்களோடு தொடர்பு கொண்டு சுமார் 7 லட்சம் ரூபாய் திரட்டி "திருமகள் நூற்பாலை" ஒன்றை நிறுவி 1937 முதல் 1965 வரை சிறப்பாக நிருவகித்தார்.

செங்குந்த சமுதாயப் பணி

திரு. கா.அ.சண்முக முதலியார் அவர்கள் திருப்பத்தூரில் தாம் தோன்றிய செங்குந்த குல மக்களின் முன்னேற்றத்தில் இளமை முதல் ஆர்வம் காட்டி வந்தார்.

1934ல் திருவாரூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில், வர்த்தக மாநாட்டுத் திறப்பாளராகவும் 1937ல் மதுரையில் கூடிய செங்குந்தர் மாநாட்டுத் தலைவராகவும் 1956ல் திருச்செங்கோட்டில் கூடிய செங்குந்தர் மாநாட்டில் சமூக மாநாட்டுத் தலைவராகவும் சண்முகனார் அவர்கள் பங்கேற்றார்.

சண்முகனார் அவர்கள் 1955ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய

செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 25-12-1976 வரை தொடர்ந்து 21 ஆண்டுகள் தலைவராக இருந்து பெரும் பணியாற்றினார்.

அப்போது கட்டுமானப் பணியில் இருந்த வள்ளலார் மாணவர் இல்லத்துக்கு ரூ.5.000/- நன்கொடை அளித்ததோடு, கட்டிட நிதிக்குப் பெரும் பொருள் ஈட்டித் தந்தார், திருக்கோயில்கள் பணிக்காகவும். கல்வி நலத்திற்காகவும் இவர் அளித்த நன்கொடைகள் ஏராளம்; ஏராளம்.

கவிஞராகத் தமிழ்ப்பணி

திரு.கா.அ.சண்முகனார் அவர்கள் ஒரு சிறந்த கவிஞராகவும் இருந்தார். இவருடைய தமிழறிவு வியக்கத் தக்கது, இயல்பாக கவியியற்றும் இவரது திறமையை கண்டு தமிழறிஞர் பலரும் போற்றியுள்ளனர், இவர் இயற்றிய கவிதை நூல்கள் விபரம்:-

நயாளினி வெண்பா, திருமால் போற்றி அகவல், இராமன் புகழ் அறுபது, திருமால் அவதாரம், திருவேங்கடமாலை, நூற்றியெட்டு திருப்பதி போற்றி அகவல், திருமால் வெண்பா மாலை, இராகவன் புகழ் மாலை, திருவேங்கடப்பெருமாள் திருப்பள்ளியெழுச்சி, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, திருமால் அருச்சனை நூல், புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இவருடைய பொது வாழ்க்கை. தேச விடுதலை இயக்கத்தின் ஈடுபாடு, காங்கிரஸ் பேரியக்கத்தில் பணி, கல்விப் பணி, வேதாந்த பாட சாலைப் பணி, கோயில் திருப்பணிகள், செங்குந்த சமுதாயப்பணி, தமிழ் பணி, கவிதைகள் இயற்றும் பணி இவையெல்லாம் இவருடைய பெருமைகளைப் பேசிக் கொண்டேயிருக்கும்.

செங்குந்த செம்மல், திருப்பத்தூர் தீபம் கா.அ.சண்முக முதலியார் அவர்களது மாபெரும் வாழ்வு 1978ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் நாள் (காளயுக்தி ஆண்டு ஆடிமாதம் முதல் நாள்) திங்கட்கிழமையன்று 93வது வயதில் இறைவனடி சேர்ந்தார். வாழ்க அவரது புகழ்! வளர்க அவர் தொண்டு!

நன்மனச் செம்மல் சி. நடராஜ முதலியார் 110-வது பிறந்த நாள் நினைவு அஞ்சலி

நன்மனச் செம்மல் சி.நடராஜ முதலியார் அவர்கள் காஞ்சி மாநகரில் செங்குந்த குல பிரமுகராக விளங்கிய சின்ன குழந்தை முதலியார் - கல்யாணி அம்மாள் தம்பதியருக்கு 03.11.1907 அன்று மூன்றாவது மகனாக பிறந்தார். காஞ்சிபுரத்தில் நம் குல முதல் பட்டதாரியாக 1928ல் பி.ஏ. பட்டம் பெற்றார். பேரறிஞர் அண்ணாவும் உடன் படித்தவர்.

1932ல் நம் குல முதல் வழக்கறிஞராக பதிவு செய்தார். சென்னை திருவல்லிக்கேணி செங்குந்தர் சங்க செயற்குழு உறுப்பினராக 1930ல் பணிவிடை செய்தார்.

1937ல் காஞ்சிபுரத்தில் நடந்த செங்குந்த மகாஜன மாநாட்டில் இளைஞர் அணி தலைவராக இருந்து சிறப்பாக செயல்பட்டார். இவருக்கு சி. ந.விஸ்வநாதன் எம்.ஏ.பி.எல்., டாக்டர்.சி.ந.சொக்கநாதன், எம்.பி.பி.எஸ். சி.ந. சிவகுமார் பி.ஏ. பி.எல் , டாக்டர் சி. ந.ரவீந்திரன் ஆகிய நான்கு மகன்கள் உள்ளனர்.

நமது தலைமை சங்கத்தில் சி. நடராஜ முதலியாரை அன்புடன் 'சி. என்.' என்று அழைப்பார்கள். அவரது மனைவி கௌரி அம்மாள் தலைமையில் 09-09-1947ல் மாயவரத்தில் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மாதர் மாநாடு நடந்தேறியது.

'சி. என்.' அவர்கள் 05.06.1944 அன்று தஞ்சை கூரை மாநாட்டின் செயலாளராக சிறப்புடன் பணியாற்றினார். 17.3.1945-ஆம் ஆண்டு ஈரோட்டில் பேராசிரியர் எஸ். மீனாட்சி சுந்தரனார் தலைமையில் நடந்த ஜில்லா மாநாட்டில் 'நன்மனச் செம்மல்' பட்டம் சி. நடராஜ முதலியாருக்கு வழங்கப்பட்டது.

சுமார் 30 ஆண்டு காலம் தலைமை சங்க செயலாளராகவும், செங்குந்த மித்ரன் - கௌரவ ஆசிரியராகவும்

செங்குந்தர் குலச்செம்மல்
A.J.அருணாசல முதலியார்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் பிரபல நூல் வியாபாரம் திரு.A.ஜெகநாத முதலியாருக்கும் திருமதி.பழனியம்மாளுக்கும், இரண்டாவது மகனாக பிறந்த திரு.A.J.அருணாசலம் நகரில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் SSLC படிப்பை முடித்தார். பின்பு இண்டர்மீடியட் படிப்பை வேலூர் நகரில் உள்ள புகழ் பெற்ற ஊரிஸ் கல்லூரியில் முடித்து பி.ஏ.பட்ட படிப்புக்கு சேர்ந்தார். கல்லூரியில் படிக்கும் போதே நாட்டு பற்று கொண்டவராக விளங்கினார்.

வேலூர் நகருக்கு வரும் தேசிய தலைவர்களின் கூட்டங்களுக்கு சென்று வருவார்.

தன் சொந்த ஊரான குடியாத்தம் நகரில் சண்முகர் கம்பெனி என்கின்ற நூல் வியாபாரத்தை துவக்கினார். 1939 - 1941ஆம் ஆண்டுகளில், கள்ளுக்கடை, வெள்ளையனே வெளியேறு போராட்டங்களில் கலந்து கொண்டு வேலூர் மத்திய சிறை சாலையில் 10 மாதங்கள் கைதியாக இருந்தார்.

1935ஆம் ஆண்டு தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் துவக்கப்பட்டபோது கோவை திவான் பகதூர் C.ரத்தினசபாபதி முதலியார், ஆந்திரா பேராசிரியர் N.G.ரங்கா மற்றும் திரு. M.சோமப்பா ஆகியோருடன் நட்பு கொண்டார். பின்பு சங்கம் துவக்கப்பட்டதும் மூவருக்கும் துணை தலைவராக பணியாற்றினார். 1952 ஆம் ஆண்டு தலைவராக தேர்வு பெற்ற திரு.M.P.நாச்சிமுத்து அவர்களுக்கு துணை தலைவராக 1967 ஆம் ஆண்டு வரையில் மொத்தம் முப்பது ஆண்டுகள் துணை தலைவராக பணி ஆற்றிய பெருமை திரு.A.J.A. அவர்களுக்கு உண்டு.

1949ஆம் ஆண்டு குடியாத்தம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்று M.L.A. ஆனார். அப்போது முதல்வராக இருந்த திரு. P.S.குமாரசாமிராஜா அவர்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும்

சிறப்புடன் சேவை ஆற்றினார். மதராஸ் பாளையகாட் கம்பெனி உதவியுடன் சென்னை - அரண்மனைக்காரன் தெருவில் அமைந்துள்ள செங்குந்தர் மாளிகை தோற்றுவிக்க அரும்பாடுபட்டார்.

1940ல் செங்குந்தர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அரசாங்கம் நீக்க முயன்றபோது மீண்டும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தோற்றுவித்த அண்ணல் சபாபதி முதலியாருடன் இணைந்து போராடினார்.

தன் இறுதிக் காலம்வரை, குலத்தலைவர், கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ எம்.பி.நாச்சிமுத்துவின் உயிருக்கு உயிர் நண்பனாக வாழ்ந்து காட்டியவர். ஆன்மீக பணியில் சி.என். அவர்கள் தலைவராக செயல்பட்டு ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை முத்து விழா, திரு . வி. க . நூற்றாண்டு விழா 05.08.1983ஆம் ஆண்டு சிறப்புடன் நடத்திக்காட்டியவர்.

1940ல் அவரது தலைமையில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்த ஜனசபை வெள்ளி விழா திரு . வி . க . முன்னிலையில் நடத்தப்பட்டது.

அவரது சமுதாய பணியில் திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜ கல்வி கழகம், புளூமவுண்டன் சிட்பண்டு, சைதை நில வளவங்கி, சைதை அன்னபூரணி பள்ளி, மதராஸ் கைத்தறி கூட்டுறவு சங்க வழக்கறிஞர் ஆகியவற்றிற்கும் மேலாக தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க சேவை அவரது உயிர்நாடியாக விளங்கியது.

நன்மனச் செம்மல் சி. நடராஜ முதலியார் நூற்றாண்டு விழா 21.11.2008 அன்று சென்னை மைலாப்பூர் பாரதிய வித்யா பவனில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் உத்யோக ரத்னா ஜெ.சுத்தானந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

உச்ச நீதிமன்ற நீதியரசர் எல்.நடராஜன் அவர்கள் விழா மலர் வெளியிட நீதியரசர் எஸ். ஜெகதீசன் அவர்கள் சி. நடராஜ முதலியார் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேருரை ஆற்றினார். அவ் விழாவில் அன்னாரது குடும்பத்தினர் ரூபாய் இரண்டு லட்சம் நன்கொடை மற்றும் சுழற்கேடயம் செங்குந்தர் குல மேம்பாட்டு நிதிக்கு வழங்கப்பட்டது.

1983-ம் ஆண்டு நம் குல குரு வள்ளல் கிருபானந்தவாரியார் மற்றும் நம் குல கர்மவீரர் சி. நடராஜ முதலியார் இருவருக்கும் தென்னிந்திய மகாஜன சங்க புரவலராக கௌரவிக்கப்பட்டது. எளிமை, நேர்மை, நாநயம், பணிவு போன்ற குணங்கள் அவருக்கே உரிய சிறப்பு. ஐம்பது ஆண்டு கால சமுதாய பணியில் சிறப்புடன் செயலாற்றிய சி. என். அவர்கள் தம் 77-ஆம் வயதில் 18-04-1984 அன்று இயற்கை எய்தினார்.

தற்பொழுது செங்குந்த குல சொந்தங்களை சிறப்புடன் வழிநடத்திச் செல்லும் கைத்தறிக் கதிரவன் திரு. K.P.K.செல்வராஜ் தலைமையில் நம் குல இளைய செங்குந்த சமுதாயத்திற்கு நன்மனச்செம்மல் நடராஜ முதலியார் வாழ்க்கை வரலாறாகத் திகழும்.

- C.N.சிவக்குமார் செங்குந்தர்,
சென்னை.

பாத்திரமானார். 1952 ஆண்டு சட்டமன்ற தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1954 ஆம் ஆண்டு பெருந் தலைவர் K.காமராஜ் முதல்வராக தேர்வு பெற்றார். அவர் அப்போது M.L.A.வாக இல்லை திரு.A.J.A. அவர்கள் தன் தலைவர் முதல்வராக தொடர தன் MLA பதவியை ராஜினமா செய்தார். பின்பு தலைவர் K.காமராஜ் அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்று முதல்வர் பதவியை தொடர்ந்தார். தனக்கு MLA பதவியை ராஜினமா செய்த A.J.A. அவர்களுக்கு MLC. (1956 முதல் 1962) பதவி அளித்து மகிழ்ந்தார்.

திரு.A.J.A. MLA மற்றும் M.L.C. ஆக இருந்த காலத்தில் குடியாத்தம் நகருக்கு பெரிய பாலம் கட்டித்தந்தார். கூட்டுறவு நகர பேங்க் உருவாக்கப் பட்டது. பாலிடெக்னிக் கல்லூரியை கொண்டு வந்தார். அரசினர் கலைக்கல்லூரி அமைத்துத் தந்தார். அரசினர் மருத்துவமனை விரிவுபடுத்தப்பட்டது. டவுன் பஸ்கள் விட ஏற்பாடு செய்தார். பல கிராமங்களில் துவக்கப்பள்ளி உயர் நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தலைவராக திரு.M.P.நாச்சிமுத்து அவர்களும் துணை தலைவராக திரு.A.J.A. அவர்கள் இருந்தபோது கோ ஆப்டெக்ஸ் தலைமையிடத்தில் வருடம்தோறும் கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டது. கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிக்க தள்ளுபடி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகள் துவங்கப்பட்டது. முதல் நூற்பாலை திருநெல்வேலி, பேட்டை மற்றும் வேலூர் அரியூரில் துவக்கப்பட்டது. திரு. A.J.A. எல்லா நூற்பு ஆலைக ளிலும் இயக்குனராக பணிஆற்றினார். நெசவாளர்கள் பிரச்சினைகள் பற்றி பலமுறை சட்டமன்றத்திலும், சட்ட மேலவையிலும் பேசி உள்ளார். Handloom அருணாசலம் என்றும் அழைக்கப்பட்டார் காங்கிரஸ் கட்சியில் மாவட்ட துணைதலைவர், நகர தலைவர் போன்ற பல பொறுப்புகள் வகித்து உள்ளார்.

திரு.A.J.A. அவர்களின் சேவையை போற்றும் வகையில் சென்னையில் உள்ள தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் (பாலசுந்தரம் பில்டிங்) 1960 ஆம் ஆண்டு 6 1/2 அடி உயரம் 3 1/2 அடி அகலம் கொண்ட பெரிய போட்டோ முதல்வர் மு.காமராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதே போன்று குடியாத்தம் நகரில் நெசவாளர்களின் குடியிருப்புக்கு அருணாசல நகர் என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

தேசபக்தியும், தெய்வபக்தியும் உடைய திரு.A.J.A.அவர்கள் தமது மகன்களுக்கு குமரன், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் என்று தேசிய தலைவர் கள் பெயர் இட்டார். மேலும் நமது பொருளாதார தொண்டு மன்றம் (SES) சென்னையில் திரு.D.A.S.பிரகாசம் அவர்களுடன் இணைந்து திரு. A.J.A.அவர்களின் முத்த மகன் திருத் தணி வழக்கறிஞர் திரு.A.J.A.குமரன் அவர்கள் துவக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. தியாகி திரு.A.J.A. அவர்கள் தமது 86 ஆம் வயதில் (09-03-1993) இயற்கை எய்தினார்.

செங்குந்த முதல்வர் வள்ளல் சபாபதியார்

திருவாரூர் நாகப்ப சபாபதி செங்குந்தர் அவர்கள் விய ஆண்டு சித்திரைத் திங்கள் 18-ம் நாள் (1886) தோன்றினார். தம் இளம்பருவம் தொட்டே, கொழும்பு நகரோடு கைத்தறித் துணி வாணிபம் பல ஆண்டுகளாகத் திறமையுடன் நடத்தி வந்த தம் தந்தையாருக்குப் பெருந்துணையிருந்தது வாணிப நுணுக்கங்களையெல்லாம் நன்கு அறிந்துகொண்டார்.

மஞ்சக் கொல்லை, திருமலை ராயன் பட்டினம், காரைக்கால் ஆகிய ஊர்களைச் சேர்ந்த நம் சமூக வியாபாரிகள் கொழும்பில் கைத்தறித்துணி வாணிபம் நடத்தி வந்தார்கள். நம்மவர்களுக்கிடையே நிலவிய போட்டியையும் அதனால் விளைந்த மனக் கசப்பையும் பொருளின் விரையத்தையும் கண்ட இளைஞர் சபாபதியார், தம்மையும் தம் சமூகத்தவரையும் எதிர்நோக்கி நின்ற பிரச்சனையைச் சந்தித்த முறையே தனிச்சிறப்பு வாய்ந்தது.

1945-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாளன்று கூறை நாட்டிலே தஞ்சை மாவட்ட செங்குந்தர்களின் முதல் மாநாடு சீறும் சிறப்புமாக நடைபெற்றது. "செங்குந்தர்களுக்குள் கூட்டுறவு வேண்டுமானால், ஒரு கிராமத்தார்களோ, ஒன்று கூடி, கூட்டாகப் பெரும்பொருள் போட்டு வியாபாரத்தைத் துவங்க வேண்டும். அவ்வியாபாரத்தை எத்துறையிலாயினும் பயன்படுத்திக் கொண்டு, எனக்கென்ன உனக்கென்ன என்ற எண்ணத்தை அறவே ஒழித்து, அவரவர்களும் தங்கள் தங்களதாக கருதி உழைத்துப் பெறும் பொருளைத்தேட வேண்டும். இதற்கு எத்தனையோ முட்டுக் கட்டைகள் ஏற்பட்டு மனச்சோர்வு அடையும்படி நேரிடும் அக்காலத்தில் தளராத ஊக்கத்துடன் கருமமே கண்ணாக உழைக்க வேண்டும். அவ்வாறு நடந்து கொள்வீர்களானால் பெரும் பொருள் திரட்டலாம்" என அம்மாநாட்டில் வள்ளல் சபாபதியார் பேசினார்.

இந்த இனிய பேச்சுக்கு ஏற்ப 1926-ல் ஆறு கடைகளை ஒன்றாக இணைத்து மதராஸ் பளயகாட் கம்பெனி என்ற வாணிப நிலையத்தை உருவாக்கினார். பின்னர் 1930-ல் பதினாறு கூட்டாளிகளுடன் சேர்ந்து மதராஸ் பளகாட் கம்பெனியைப் பெரிய அளவில் உருவாக்கினார். இத்துடன் கொழும்பு நகரில் கொட்டைப் பாக்கு வாணிபம் செய்து

வந்த மூன்று கம்பெனிகள் இணைந்து 'கொழும்பு நகரில் கொட்டைப் பாக்கு கம்பெனி' என்ற பெரியதொரு கம்பெனி உருவாக்குவதற்கு மூலகாரணமாயிருந்தார்.

வடஆற்காடு மாவட்டத்தில் திருவத்திபுரத்தில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஐந்தாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முடிவுக்கிணங்க, பல ஊர்களிலும் உள்ள செங்குந்தர்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் பெரும்பாலும் செங்குந்தர்களையே பங்குதாரர்களாகச் சேர்த்து, குடியேற்றத்தில் 'திருமகள் நூல் ஆலையைத்' துவங்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார் வள்ளல் சபாபதியார்.

சபாபதியாரின் அறச் செயல்கள் பலப்பல, பேரரசரும் செங்குந்த சமூகத்தவருக்குமுள்ள தொடர்பை நன்கு அறிந்திருந்த இவர் திருவாரூர்ப் பங்குனி உத்திரபெருவிழாவின் போதும் பக்த காட்சித் திருவிழாவின் போதும் நடைபெறும் முசுகுந்தர் ஆயிரம் போற்றி வழிபாடும், புரட்டாசி பௌர்ணமியில் நடைபெறும் ஆயிரம் போற்றி வழிபாடும் என்றென்றும் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏதுவாக நான்கு ஏக்கர் நஞ்சை நிலத்தையும், இரண்டு வீடுகளையும் முதற் பொருளாக எழுதி வைத்திருக்கிறார்.

சபாபதியார் தம் தொழிலின் காரணமாகப் பல ஊர்களுக்கும் சென்றபோதெல்லாம், தம் சமூக ஏழை நெசவாளர்களையும் அவர்களின் வறிய வாழ்க்கையும், பலப்பல கிராமங்களில் கட்சிப் பூசல்களின் காரணமாக ஏற்பட்டிருந்த பிளவுகளையும் கண்டு மனம் நொந்தார். சோழர்களின் ஆட்சியில் சீரும் சிறப்புடனும் விளங்கி கைக்கோளச் செங்குந்தர்கள் பெரும் படையார் சோழர்களின் வீழ்ச்சிக்கு தமிழகமெங்கும் பகுதிபகுதியாகப் பிரிந்து சென்று குடியேறி நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தனர்.

இந்த அவல நிலையை மாற்றிச் செங்குந்த சமூகத்தவரிடையே மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்படச்செய்தவர் வள்ளல் சபாபதியார். 1927-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்' என்ற மாபெரும் ஸ்தாபனம் ஒன்றை நிறுவி, தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அதன் வளர்ச்சிக்கு பயன்படுத்தி நாடெங்கும் சிதறுண்டு கிடந்த 72 கிளை நாட்டுச் செங்குந்தர்களையும் தாங்கள் பழம் பெருமை வாய்ந்த ஒரு பாரம்பரியத்தின் வாரிசுகள் என்பதை உணரச் செய்தவர் வள்ளல் சபாபதியார்.

தேனை மறந்துவிட்ட வண்டும் வானை மறந்து விட்ட பயிறும் ஒளிச் சிறப்பை மறந்து விட்ட பூவும் இந்த தகவல் வையகம் முழுவதும் இல்லாததைப்போல வள்ளல் சபாபதியாரின் அரும்பெரும் தொண்டுகளை நன்றி மறவாத செங்குந்த சமுதாயம் என்றென்றும் எண்ணி எண்ணி இறும்பூது எய்துவதுடன் அவர்காட்டிய நன்னெறியில் இனிதே நடந்து நலம் பலகாணும் என்பது உறுதி.

வள்ளல் சபாபதியாரின் கனவுகளெல்லாம் நனவாக நாளெல்லாம் உழைப்போமாக.

செங்குந்த குலச் செம்மல்

குடியேற்றம் கே.எம்.ஜி . கல்வி நிறுவனங்களின் நிறுவனர்

திரு. கு.மா.கோவிந்தராசனார் அவர்களின்

நூற்றாண்டு விழா (1919 - 2019)

தோரண வாயில் :

குடியேற்றத்துக் கல்வி வள்ளல், மத நல்லிணக்கநாயகர், கல்விக் காவலர், குடியேற்றம் நகர்தன்னில் கல்வி குடியேற வைத்திட்ட கல்வி முதல்வர், தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி ஆராய்ச்சிப் படிப்பு வரை தொடங்கி ஆயிரமாயிரம் மாணவர்களின் குடும்பத்தில் அறிவொளி வழங்கிய தியாகதீபம், தெய்வத்திரு. கு.மா.கோவிந்தராசனார் அவர்கள்.

கல்விப்பணிக்காகவே அவதரித்தவர்

தெய்வத்திரு.குஞ்சாமாணிக்கனார் - இலட்சுமி அம்மையாரின் தலைமகனாய் 26.07.1919 அன்று அவதரித்தவர் இவர் என்றாலும், அவதரித்த நோக்கம் கல்விப் பணிக்காகவே தன்னை அர்பணித்தார் என்பது உண்மை.

அன்னவை யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று பாடிய பைந்தமிழ்ப் புலவன் பாரதியின் கனவு வரிகளுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தவர். கீதா பிக்சர்ஸ் என்னும் திரைப்படத் தயாரிப்பு விநியோகம் மற்றும் நிதிஉதவி தொழில் நிறுவன பங்குதாரர். குடியேற்றம் நகரமன்றத் தலைவராக 5 ஆண்டுகள் (1964-1969) பணியாற்றியவர். சமயங் களிடையே சமரசம் காண பள்ளியின் நுழைவாயிலில் திருக்கோயில் கோபுரம், மாதாகோயில், பள்ளிவாசல் அமைத்தவர்.

இல்லறம் என்னும் நல்லறம்

அன்னை கௌசல்யா அம்மையாரின் திருக்கரம் பற்றி நான்கு நன்மக்களை ஈந்தவர். திரு.கே.எம்.ஜி. பாலசுப்பிரமணியம், திரு.கே.எம்.ஜி. சுந்தரவதனம், திரு.கே.எம்.ஜி. இராஜேந்திரன், திரு.கே.எம்.ஜி. முத்துக்குமார் அவர்தம் மருமகள்கள் திருமதி. மீனாட்சி பாலசுப்ரமணியம், திருமதி. உஷாராணி சுந்தரவதனம், திருமதி. திலகவதி இராஜேந்திரன், திருமதி. மணிமேகலை முத்துக்குமார் ஆவர்.

மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும்

மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் தமது இரு கண்களாக கருதியவர். திருவள்ளுவரின் திருப்பெயரால் பள்ளிகளை அமைத்தார். இளமைக் காலத்தில் கள்ளுக்கடை மறியலின்போது இந்திய தேசியக் கொடியைக் கையிலேயந்தி, துர்காபாய் தேஷ்முக்

சங்கம் தனது மக்களுக்கு மாறிவரும் காலத்தின் தேவைக்கேற்ப எந்தந்த வகையில் தொண்டு செய்ய முடியும் என்று அயராது சிந்தித்து அதைப் பற்றி பலருடன் கலந்துரையாடி அதை நடைமுறைப்படுத்திட திட்டமிட்டு பின் நினைத்தவண்ணமே செய்து முடிக்கும் ஒரு பெரும் திறமைக்கு சொந்தக்காரர் இந்த ச.கு.பா..

சுதந்திர இந்தியாவில் கல்வித் தாகம் எழுந்தது. பலக் குடும்பங்களில் இருந்து தறிக்காரன் வீட்டுப் பிள்ளைகள் உயர் நிலைப்பள்ளிக்குச் சென்றனர், கருவிலே திருவுடைய செங்குந்த மாணவர்களின் கல்வியிலே ஊக்கம் கொள்ள செய்திட போற்றிப் பாராட்டுவது சமுதாயத்தின் முதல் கடமையாயிற்று. இதற்கு எனப் பிறந்ததே ஊக்கப்பரிசு திட்டம்.

தஞ்சை ஜில்லா சங்கம் தொடர்ந்து செயல்படுவதற்கு உயிராக விளங்குவது உண்டியல் வசூல் திட்டமே. கேட்டால் கொடுக்கப்படும் என்ற கட்டளையை ஏற்று ஆண்டுக்கு ஒருமுறை நம்மவர் இல்லங்களுக்கு சென்று நிதி வசூலிக்கப்படும் உண்டியல் திட்டம் உலகுக்கே ஒரு புதுமையானது. இதனால் பயன்பெறும் ஏழை எளிய மாணவர்களின் நன்றிக்கும் அளவே இல்லை. சங்கத்தில் உதவியை பெற்றவர்களிடமிருந்து மீண்டும் நிதி வசூல் செய்து சங்கத்தை வளர்க்க கற்பகத்தரு திட்டத்தையும் இவர் தொடங்கியுள்ளார்.

இந்த சங்கப் பணிகளில் ச.கு.பா. அவர்களுடன் துணைவராய் விளங்கியத் திரு.T.P.முத்தையா, திரு.R.கலியபெருமாள், திரு. P.S.P.சண்முகம், திரு. K.கோவிந்தசாமி, திரு. கு.சி.பா. சிவகுருநாதன், திரு.சாமிரெத்தினம் திரு.சீ.ஆறுமுகம், திரு.க.பாலசுப்பிரமணியம், திரு.அ.அருணாசலம், திரு.சுவாமிராமலிங்கம் போன்ற மற்றும் பலரும் நாம் பெருமையுடன் போற்றத் தக்கவர்கள்.

கைத்தறிக்காவலர் அமரர் பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 1981-ல் புதிய சட்டதிட்டம் வகுக்க ச.கு.பா பெரும் துணைப் புரிந்தார்,

ச.கு.பா மாநில சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர், சென்னை வழக்கறிஞர் அமரர் சீ.நடராஜ முதலியாரின் பேரன்பிற்கு இவர் பாத்திரமானவர். தலைமைச்சங்க முன்னால் செயலாளர் அரிமா.தெ.சேதுராமன் ச.கு.பா. அவர்களின் தோழராய், தொண்டராய் தலைவராய் நின்று சங்கப்பணிகள் அனைத்துக்கும் உதவிப்புரிந்து நல்லாதரவு தந்தார். தலைமைச்சங்கப் பொருளாளராக இருந்த திரு.M.S.ரெங்கையா அவர்கள் ச.கு.பா. அவர்களின் நற்பணிகள் அனைத்தையும் மகிழ்வுடன் போற்றி வரவேற்கும் பெரும் குணச்செல்வர்.

துல்லியமானக் கணக்கு, செவ்வையான கடிதபோக்குவரத்து நடந்தவற்றைத் தெளிவாகச் சொல்லும் நினைவு ஆற்றல் உறவினர்களை துள்ளியமாக மதிக்கும் தனித்திறம் பெரியோர்களின் மனம் அறிந்து பழகும் பாங்கு எதிர்வரும் செயலை உருவே ச.கு.பா. மனசாட்சிக்கு மதிப்பளித்து கடவுளிடம் ஆழமான பக்திப்பூண்டு உண்மையாக உழைத்தவர் ச.கு.பா. அவர்கள்,

மறைந்த மாநில முன்னாள் தலைவர் பத்மஸ்ரீ M.P. நாச்சிமுத்து

பழநிவேலர் தென்னாட்டுத் திருமகனாக விளங்கிய சபாபதி முதலியாரின் அறிமுகம் பெற்றார். அன்புக்கு உரியவர் ஆனார். அணுக்கத் தொண்டரும் ஆனார். ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறையே தோன்றும் விடிவெள்ளியாம் சபாபதி முதலியார் தொண்டராம் பழநிவேல் அவர்களின் எளிமையை, பணியை, பொறுப்பை மதித்துப் போற்றினார்

செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரச்சாரகராக ச.கு.பா. 1942 -ல் நியமனம் பெற்று தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களின் சங்கப் பணிகளில் பேரூக்கம் காட்டினார். இதனால் இவரது நட்பின் எல்லை பரவலாயிற்று.

எங்கெங்கு காணினும் வறுமையும் அறியாமையும் நோயும் துயரமும் மண்டிக்கிடக்கும் செங்குந்த மக்களின் துன்பம் துடைத்திட வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் தஞ்சை ஜில்லா சங்கம் 1944 -ல் தொங்கப்பெற்றது. மன்னைப் பெரியவர் அமரர் பெரி. இராம.நடராஜ முதலியார் அதன் தலைவராக பெரும் பணிபுரிந்தார். அன்று தொட்டு தனது மறைவு வரை தஞ்சை மாவட்ட சங்கத்தின் பொதுச் செயலாளராக ச.கு.பா. அவர்கள் தொடர்ந்து கடமையாற்றியது வரலாற்றுச் சாதனையாகும்.

1947 -ஆம் ஆண்டில் தஞ்சை ஜில்லா சங்கத்திற்கு ஆக்கூர் தியாகி. அண்ணல் சு.ராமலிங்க முதலியார் தலைமைப் பொறுப்பேற்று சங்கத்திற்கு செயலூக்கம் தந்தார். சங்கமா? அது நமக்கு என்ன சாதித்தது? என்று கேள்விகளை தெரிவிப்போருக்கு விடையாக பட்டியலிட்டுச் சொல்லிட மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவும் செயல் திட்டங்களைச் சுட்டிக்காட்டியதும் தொடர்ந்து நடத்தியதும் தஞ்சை ஜில்லா சங்கத்தின் தனிச்சிறப்பு

தஞ்சை மாவட்ட சங்கத்தின் முதல் மாநாடு 1945 -ல் நடைபெற்றது. மாவட்ட சங்கத்தின் வெள்ளிவிழா 13.12.1970-ல் திருவாரூரில் எழுச்சியுடன் நடந்தது. சங்கச் செய்திகளை பெட்டகமாக என்றென்றும் பேணிக் காத்திடும் கருவூலமாக விளங்கும் வெள்ளிவிழா மலர் வெளியிடப்பட்டது.

திரு.ச.கு.பா அவர்களின் மணிவிழா ஆக்கூர் அண்ணலும் மஞ்சக் கொல்லை பெரியவரும் மகிழ்ந்து வாழ்த்த 7.10.1979-ல் சமுதாய பெருவிழாவாக மகிழ்ச்சிப் பெருக்குடன் நடந்தது. மணிவிழா மலரும் மலர்ந்தது கருத்து மணம் கமழ்ந்தது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 16-வது மாநில மாநாடு தடைகள் பலவற்றை வென்று ஜூலை 1991-ல் கும்பகோணத்தில் பலரும் போற்றும் வண்ணம் நிகழ்ந்தபோது அதன் நிர்வாக பொதுச் செயலராக இருந்து தனது உள்ளார்ந்த வேட்கையை நிறைவேற்றி காட்டினார். திருவானைக்காலில் நடந்த 8வது மாநாடு தொடங்கி தனது வாழ்நாள் வரை நடந்த அனைத்து மாநாடுகளுக்கும் சமுதாயப்பணிகள் பலவற்றுக்கு உறுதுணையாக நின்றார் ச.கு.பா.

தஞ்சை ஜில்லா செங்குந்த சங்கம் ஒரு மாவட்ட அமைப்பு மட்டும் அன்று பல மாவட்ட சங்க அமைப்புகளுக்கு தலைக் காவிரி, தாய்வீடு, ஒரு சாதி,

மலர்: 19 இதழ்: 1

ஜனவரி 2019

Date of Publication
25th day of Every Month

தனிப்பிரதி விலை: ₹ 15/-

செங்குந்த மித்திரன்

செங்குந்தர் குலச் செம்மல்
ச.கு.பா.பழநிவேல் செங்குந்தர்

செங்குந்த குலச் செம்மல்

தெய்வத்திரு.ச.கு.பா.பழனிவேல் செங்குந்தர்

ஊர் நலம் கருதி உழைத்த உத்தமர் எஸ்.கே.பாவாடை முதலியார் அவர்களுக்கும் திருமதி. விசாலட்சி அம்மையாருக்கும் பழநிவேல் அவர்கள் 10.10.1919-ல் கூறை நாட்டில்பிறந்தார்.

குலத்தொழிலாம் நெசவுத் தொழிலைச் செய்து வந்த பாவாடை முதலியாருக்கு செங்குந்தர் சமுதாயம் நன்றிச் சொல்லவேண்டும். தனது குடும்பத்தின் வறுமை நிலையிலும் நான் எப்படியாவது தறி வேலை செய்தாவது என் மகன் பழநியை படிக்க வைப்பேன் என்று உறுதிக்கொண்டு மகனை பள்ளி இறுதி வரை படிக்க வைத்த அந்த மன உறுதி இல்லையென்றால் இன்று ச.கு.பா. அவர்களுக்கு புகழ் பூத்த பொது வாழ்வு இல்லை.

அடிமை இந்தியாவில் ஆசிரியர் பணி இளைஞர்களை கவர்ந்தது. பள்ளி இறுதி வகுப்பிற்கு பிறகு ஆசிரியர் பயிற்சியை மேற்க்கொண்டு தொடக்கப் பள்ளியில் 27.6.1940-ல் ஆசிரியராய் பணியைத் தொடங்கிய பழநிவேலனார் 38 ஆண்டுச் சேவைக்கு பின்னர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராய் 30.10.1977 -ல் ஓய்வுப்பெற்றார்.

பசித்தவனுக்கு உணவின் சுவைத் தெரியும் என்பதுபோல ஏழைகளுக்கு தான் கல்விச் செல்லத்தின் பெரும்பயன் புலனாகும். ஆதலால் பழநிவேலனார் பெற்றத் தாயின் சாலப் பரிந்து தம்மிடம் பயின்ற மாணவர்களின் முன்னேற்றத்திற்க்கு உதவினார்,

இவர்தம் வாழ்கைத் துணைவியார் திருமதி.ஜெயலெட்சுமி அம்மையார் இவர்களின் இல்லறப் பயனாய் விளங்கும் அன்புச் செல்வங்கள் நால்வர். திருமதி.சரஸ்வதி, திருமதி சாந்தநாயகி, திரு.செல்வமுத்து குமாரசாமி, திரு.அய்யப்பன் ஆகிய இந் நால்வரும் தம் பெற்றோர் இடத்தில்பேரன்பு கொண்டவர்கள்.

ச.கு.பா. அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் திருப்பு முனையாக விளங்கியவர் திருவாரூர் வள்ளல் தி.நா.சபாபதி முதலியார் அவர்களே. கூறை நாட்டில் வாலிபர் சங்கம் சிறப்பாக செயல்பட்டதால்

தலைமையில் வந்தே மாதரம் பாடலைப் பாடிப்பரிசு பெற்றவர்.

பள்ளியின் வரலாறு

கேடில் விழுச் செல்வம் கல்வி என்ற வள்ளுவர் காட்டும் பெருஞ் செல்வத்தினைக் குடியேற்றம் மக்களுக்கு வழங்க 1952-ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளியைத் தொடங்கினார். 1954-இல் நடுநிலைப் பள்ளியாக உயர்ந்தது. 1960-ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகவும், மேலும், 1978-ஆம் ஆண்டு நகரிலேயே முதல் மேனிலைப் பள்ளியாக இப்பள்ளி தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளி ஆசிரியப் பெருமக்களின் கடுமையான ஒத்துழைப்பாலும், பொதுமக்களின் ஆதரவாலும், இன்று 10,000-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலை பயிலும் கலைக்கூடமாக கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள் வளர்ந்துள்ளது.

2000-ஆவது ஆண்டு முதல் கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவள்ளுவர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி ஆகிய அனைத்துக் கல்வி நிறுவனங் களையும் நிறுவி, அடிப்படை கல்வி முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை ஏழைக் குழந்தைகள் படிக்க வழிவகை செய்தவர்.

கனவை நனவாக்கும் கல்வி நிறுவனங்கள்

இப்பள்ளியில் படித்தவர்கள் பள்ளிப் பெருமையினை செல்லுமிடமெல்லாம் பரவச்செய்து வருகின்றனர். குறிப்பாகக் கனரா வங்கியின் தலைவராக இப்பள்ளியின் முன்னாள் மாணவர் பத்மஸ்ரீ. டி.என்.மனோகரன் அவர்கள் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியில் படித்த முன்னாள் மாணவன் திருமிகு. சுந்தரவதனம் அவர்கள் ஐ.பி.எஸ்., தேர்வில் வெற்றி பெற்று, தற்போது திருநெல்வேலி மாநகரில் பணியாற்றி வருகிறார் என்பதை மகிழ்வுடன் இங்கு பதிவு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

ஐயாவின் கனவு அவர் தம் நூற்றாண்டு விழாவில் நனவாகி வருகிறது. இவரின் தொடக்கப்பள்ளி மாவட்ட அளவில் சிறந்த தொடக்கப்ப ள்ளியாகக் கல்வித்துறையால் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்றுள்ளது. 1962-ஆம் ஆண்டு குடியேற்றத்தில் பள்ளி சீரமைப்பு மாநாட்டை கல்வித்துறை நடத்தியது. அம்மாநாட்டிற்கு வரவேற்புகுழு தலைவராகப் பணியாற்றியவர்.

சமுதாயப்பணி :

ஒன்றுப்பட்ட வேலூர் மாவட்ட செங்குந்தர் தலைவராகப் பணியாற்றியவர். 1993 ஆம் ஆண்டு அகில உலக செங்குந்தர் சமுதாய மாபெரும் மாநாடு இரண்டு நாட்கள் குடியேற்றம் மாநகரில் தன்னுடைய கல்வி நிறுவன வளாகத்திலேயே தெய்வத்திரு.ஜெ.சுத்தானந்தன் அவர்கள் தலைமையில் நடத்திக் காட்டினார். அம்மாநாட்டின் சிறப்பாக முதல் நாள் மாபெரும் ஊர்வலம் காலை 08.00 மணிக்கு தொடங்கப் பெற்று மாலை 05.00 மணி வரை யிலும் 9 மணிநேரம் மிகச்சிறப்பாக நடைபெற்று மாநாட்டின் நிறைவு பகுதியில் வந்து அடைந்தது குறிப்பிடத்தக்கது. முதல் நாள் சமுதாய வளர்ச்சி மாநாடாகவும், இரண்டாவது நாள் கைத்தறி வளர்ச்சி

சுதந்திரப் போராட்ட தியாகி திரு. S.மீனாட்சி சுந்தரனார்

சுதந்திர போராட்ட வீரராகவும், கல்வி ஆசானாகவும், ஈரோடு மாநகரின் வளர்ச்சிக்கும் பல அரிய சேவைகளை ஆற்றிய மீனாட்சி சுந்தரனாரின் 'நினைவை போற்றும் வகையில், ஈரோடு மாநகரின் முக்கிய சாலையான பிரப் ரோட்டிற்கு மீனாட்சி சுந்தரனார் வீதி என்று பெயர் மாறுதல் செய்து அறிவித்துள்ளார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி.

சுதந்திர போராட்டக் களத்தில்...

ஆங்கிலேயரின் அடக்குமுறையில் இந்தியா கட்டுண்டு கிடந்தபோது, ஈரோட்டில், கதர் இயக்கம், கள்ளுக் கடை மறியல், அந்நியத் துணி எரிப்பு போன்ற போராட்டங்களை நடத்திய ஈ.வெ.ரா. சிறை சென்ற போது, அந்த போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து நடத்தியவர் மீனாட்சி சுந்தரனார்.

சுதந்திர போராட்டக் களத்தில் திருச்செங்கோடு வந்திருந்த மகாத்மா காந்தியடிகளுக்கு ஈரோட்டிலிருந்து அங்கு சென்று அவருக்குப் பணி விடை செய்து அவரின் சீரிய தொண்டரானார். 1921ல் மகாகவி பாரதியார் ஈரோடு வந்த காலத்தில் கருங்கல் பாளையம் நூலகத்தில் நேரில் சந்தித்து, அவருக்கு நெருங்கிய நண்பரானார்.

கல்விப் பணியில்....

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே!' என்ற வாசகத்துக்கு நற்சான்றாக கல்வியையும், பொது வாழ்வையும் தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த கல்வித் தந்தை 'இருமொழி சொற்கொண்டல்' ஐயா எஸ்.மீனாட்சிசுந்தரனாருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று ஈரோடு பொது மக்கள் சார்பாக வேண்டிக்கொண்டதற்கு இணங்க, முதல்வர் எடப்பாடி பழனிசாமி பிரப் சாலைக்கு மீனாட்சி சுந்தரனார் வீதி என பெயர் மாறுதல் செய்து அறிவித்துள்ளதற்கு ஈரோடு பொதுமக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துள்ளனர்.

தமிழ், ஆங்கிலம் என இருமொழி களிலும் "புலமை பெற்று இருமொழிச் சொற்கொண்டலாக விளங்கிய மீனாட்சி சுந்தரனார் பி.ஏ. எல்.டி படித்துள்ளார். 1928 முதல் 1931 வரை சிவகங்கை அரசு உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகவும், 1931 ல் ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

1944ல் ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியை நிறுவி, நிர்வகித்து வந்தார். உண்மையான சமுதாய முன்னேற்றத்திற்கு பெண் கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையில் 1945ல் ஈரோடு, கலைமகள் கல்வி நிலையத்தை துவக்கி, பாரதியின் கனவை நனவாக்கியவர்.

அனைவரும் கல்வி செல்வத்தை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் தாரமங்கலம், சென்னிமலை, குருசாமிபாளையம் முதலிய ஊர்களிலும் பள்ளிகளை நிறுவ காரணமாக இருந்தார்.

பள்ளிகளுக்கு தேவையான ஆசிரியர்களை உருவாக்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சி பள்ளியும், ஆதரவற்றவர்களுக்கு புகலிடம் அளிக்கும் அனாதை இல்லத்தையும் துவக்கினார்.

1947ல் தமிழ்நாடு ஆசிரியர் சம்மேளனத் தலைவராக இருந்து ஆசிரியர்களுக்காக போராடி பல சலுகைகளை பெற்றுத் தந்தார்.

1955ல் டாக்டர் . அழகப்பச் செட்டியார் தலைமையில் நிறுவப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழுவின் ஆறு உறுப்பினர்களில் ஐயாவும் ஒருவர்.

கல்வி மட்டுமல்லாமல் சமூகப் பணிகள் மாணவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதற்காக சாரண இயக்கம் வளர்ச்சி பெறவும் முக்கிய காரணமாகவும் இருந்தார்.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதிநூல்கள் போல மக்களுக்கு தேவையான கருத்துகளை போதிக்க 'நகர மித்திரன்' என்ற வார இதழை நடத்தினார்.

சமூகசேவையில்...

முதலில் 9ம் வட்ட நகர்மன்ற உறுப்பினராக சேவையாற்றிய ஐயா, 1952 முதல் 1955 வரை ஈரோடு நகராட்சி தலைவராக அவர் ஆற்றிய பணிகள் இன்றும் அவர் பெயரை சொல்லி நிற்கின்றன.

ஈரோடு கோட்டை, கைக்கோளன் தோட்டம், பட்டக்காரர் ஆகிய பகுதிகளில் குடிநீர் - தேவையை பூர்த்தி செய்ய குழாய்களை - அமைத்தார். 1955 ம் வருடம் 1000 புதிய குடிநீர் இணைப்பை வழங்கியதோடு, இறைப்பு நிலையத்தின் கருவிகளை புதுப்பித்து நாள்தோறும் வழங்கும் நீரின் அளவை 7 லட்சம் காலன் (3.78 லட்சம் லிட்டர்) ஆக உயர்த்தி சாதனை படைத்தார்.

கர்ப்பிணி பெண்களின் துயர் துடைக்க பிரசவ விடுதியும், நகராட்சி ஊழியர்களுக்கு குடியிருப்பையும், 30 தெருக்களை சீரமைக்கவும் செய்தார்.

திருநகர் குடியிருப்பின் தலைவராக இருந்த 7 ஆண்டுகளில் சாலை வசதி, மின்விளக்கு வசதி, குழந்தைகள் விளையாடுமிடம், சாலையோரம் மரங்கள் உட்பட பல செயல்களால் நகரை செழிக்க செய்தார்.

ஈரோடு - சுழற்கழகம் தொடங்கியதிலிருந்து 15 ஆண்டுகள் உறுப்பினராகவும், ஒரு முறை தலைவராகவும் இருந்து தொண்டாற்றினார்.

எஸ்பிஎல்ஏ தலைவராகவும், கூட்டுறவு அர்பன் வங்கியின் தலைவராகவும், பெஞ்ச் கோர்ட் தலைவராகவும் இருந்து பல அரிய சேவைகளை செய்துள்ளார்.

கல்வியையும், பொதுவாழ்வையும் இரு கண்களாக போற்றிய மீனாட்சி சுந்தரனார், பெயரை, பிரப் சாலைக்கு சூட்டிய மாண்புமிகு முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

செங்குந்தர் குலச் செம்மல்
கைத்தறியின் காவலர்
சேலம் A. மாரியப்பன்

திரு A. மாரியப்பன் அவர்கள் 1920 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ந் தேதி ஆடி 18ஆம் நாள் சேலம் அம்மாப் பேட்டை திரு. வே.மு. ஆறுமுக முதலியார் ரத்தினம்மாள் இவர்களுக்கு தலைமகனாய் பிறந்தார். இவருடன் பிறந்த சகோதரர்கள் இருவர், சகோதரிகள் ஐவர் ஆவர். இவர் செங்குந்த சமூகப் பற்றும், பாசமும் நிறைந்த, கைத்தறி ஜவுளி வியாபார குடும்பத்தில் பிறந்தவர். பள்ளி பருவத்திலிருந்து தேசத்தையும், தேச மக்களையும் உணரலானார். அடிமைப் பட்டுக் கிடந்த நமது பாரதம் விடுதலைப் பெற தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்திஜி அவர்கள் சுதந்திர போராட்டக் குரல் எழுப்பிய போது, தனது படிப்பை பொருட்டாக நினைக்காமல் பள்ளி இறுதி ஆண்டு படிப்பைக் கூட முடிக்காமல் தன்னை தேசவிடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டார்.

திரு. N. மாணிக்க முதலியார், திரு P. மாரியப்ப முதலியார், திரு. தியாகி K. அருணாசல முதலியார், திரு S. பழனியாண்டி முதலியார், திரு P. S. சண்முக முதலியார், திரு M. பெருமாள் முதலியார் போன்ற சமூகப் பெரியோர்களான தியாகச் செம்மல்களின் ஆசியோடும், ஆதரவோடும் அம்மாப் பேட்டையில் செங்குந்தர் மேட்டுத் தெருவில் மகாத்மா காந்திஜி தேசிய வாலிபர் சங்கத்தை அமைத்தார், சங்கம் அமைத்த பிறகு, கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த இப்பகுதியில் கல்வி கற்காதவர்கள் ஏராளமானவர் இருப்பதையறிந்து இரவுப் பள்ளியை துவக்கினார். அவரது நண்பர்களும், கற்றறிந்த சமூகப் பெரியோர்களும் ஆசிரியராகப் பணியாற்றினார்கள். சுமார் - 1500க்கும் மேற்பட்டவர்கள் இரவுப் பள்ளியில் கல்விப் பயின்றார்கள்.



சுதந்திரம் அடைந்தது. சுதந்திரதிற்குப் பிறகு நெசவாளர்களுக்காகப் பல போராட்டங்களை நடத்தி தனது கட்சி அரசுக்கு நெசவாளர்களின் கஷ்டங்களை எடுத்துக் கூறி பல சலுகைகள் கிடைக்கச் செய்தார்.

1951ம் ஆண்டு அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கத்திற்கு தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பொறுப்பு ஏற்றபோது மேற்படி சங்கத்தில் 350 உறுப்பினர்கள் இருந்தார்கள்.

நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வந்து நிரந்தர வேலை வாய்ப்புக் கிடைக்க பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான நெசவாளர்களை உறுப்பினராக்கி வேலை கொடுத்தார்.

இவர் மேற்படி சங்கத்தின் பொறுப்பேற்ற பிறகு, சங்கத்திற்கு சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டினார். அவரது பெருமைக்கு எடுத்துக் காட்டாக திரு.வி.க. பாதையில் இன்றும் தலை நிமிர்ந்து நிற்பதை அனைவரும் அறிவோம். மேலும் சங்கத்திற்கு சாயச்சாலை அமைத்து அதற்கு ஒரு கட்டிடமும் வாங்கினார். அந்தக் கட்டிடம் இன்று மாரியப்பன் நிலையம் என்ற பெயரைத் தாங்கி உறுப்பினர்கள் வரவு, செலவு (நூல், கூலி, பெறுதல், துணி ஒப்படைத்தல்) செய்யும் இடமாக தங்க செங்கோட முதலித் தெருவில் உள்ளது.

1956ம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சர், பெருந்தலைவர் காமராஜ் அவர்களால் நெசவாளர் காலனிக்கு அடிக்கல் நாட்டப் பெற்று 200 வீடுகளைக் கட்டி முடித்து அதற்கு காமராஜ் நகர் நெசவாளர் காலனி என்று பெயர் சூட்டி பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் தலைமையில் பாரத வர்த்தகத் தொழில் அமைச்சராக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களைக் கொண்டு திறப்பு விழாவும் செய்தார். 1963ல் சங்கத்தின் சாதாரண சாயச்சாலையை நவீன

1936-ஆம் ஆண்டு திரு. ராஜாஜி அவர்கள் தலைமையில் அமைந்த காங்கிரஸ் மந்திரிசபையில் மதுவிலக்கை அமுலுக்கு கொண்டு வந்தபோது, அந்தச் சிறுவயதிலேயே தெருத்தெருவாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார்.

1938-ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு சோதனைக் காலம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் திரு. K.அருணாசல முதலியார் அவர்களுடன் சேர்ந்து அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று அமைத்து நெசவாளர்களுக்குப் பெரிதும் உதவி செய்தார். - தேச விடுதலைக்கோரி 1941-ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி அவர்கள் தனி நபர் சத்யாக்கிரகத்தை ஆரம்பித்தபோது, காந்திஜி அவர்களால் அங்கீகரிப்பவர்கள்தான் சத்யாக்கிரகத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற திட்டத்தையும் வெளியிட்டார்கள். அதன்படி காந்திஜி அவர்களுக்கு எழுதி அனுமதி பெற்று சத்யாக்கிரகம் செய்து பதினைந்து நாள் சிறை தண்டனை பெற்றார்,

1942-ஆம் ஆண்டு, வெள்ளையனே வெளியேறு, இந்தியக் குடிமகனே தேச விடுதலைக்காக எதையும் செய், சாக அஞ்சாதே என்ற அடிப்படையில் செய் அல்லது செத்து மடி என்ற இறுதிக் கட்டப் போராட்டத் திட்டத்தை அறிவித்தபோது காந்திஜி உள்பட நமது தேசத்தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். அந்த நேரத்தில் திரு A. மாரியப்பன் அவர்கள் ஆவேசத்தோட செயல்பட்டு மற்றத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு போராட்ட வாசகங்களை கைப்பிரதியாகவும், தனது அருமை நண்பர் திரு N. ராமசாமி உடையார் அவர்கள் தோட்டத்தில் ரகசியமாக சிறிய கை அச்சு எந்திரத்தைக் கொண்டே அச்சடித்து வெளியிட்டார்கள். அவரின் வீரமிக்க செயலை சமூகப் பெரியோர்களும், தாய்மார்களும் பாராட்டிப் பெருமைப் படுத்தினார்கள், திரு N.ராமசாமி உடையார் அவர்கள் அந்த அச்சு எந்திரத்தை இன்றும் ஞாபகார்த்த சின்னமாக வைத்திருக்கிறார்.

1946-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பெயரால் அணி ஒன்று உருவானபோது, சேலம் மாவட்டத்தில் முதல் குரல் கொடுத்தவர் திரு A.மாரியப்பன் அவர்கள்தான், அந்த ஆண்டில் காங்கிரஸ் மகாசபையின் தேர்தல் வந்தபோது சேலத்தில் காமராஜ் அணியில் நின்று வெற்றிய பெற்றார். சேலம் மாவட்டத்தில் சிறந்த, உயர்ந்த அரசியல்வாதியாக திகழ்ந்தார்.



1947-ஆம் ஆண்டு 15ஆம் தேதி நாடு

முதலியார் அவர்களின் பாசத்திற்கும் அவருடைய ஆலோசகர்களின் ஒருவராக திகழ்ந்தவர் ச.கு.பா. பத்மஸ்ரீ M.P.N மறைவிற்கு பின் மறைந்த நம் முன்னாள் மாநில தலைவர் திரு.J.சுத்தானந்தன் அவர்களை மாநிலத் தலைவராக தேர்ந்தெடுத் ததில் முக்கிய பங்கு ச.கு.பா வை சேரும்.

அன்று முதல் J.S. அவர்களால் பெரியவர் ச.கு.பா. என்று அன்பாக அழைக்கப்பட்டவர். அன்னாரது சமுதாயச் சேவையினை பாராட்டி நமது சங்கத்தினர்களால் செங்குந்தர் குலச் செம்மல் என்ற பட்டம் வழங்கப்பட்டது. மேலும் சமுதாயச் பொருளாதார தொண்டு மன்றத்தின் மூலம் சமுதாயச் செம்மல் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

தமது குடும்பமும், சங்கமும் ஒன்றே என்று வாழ்ந்து வந்த ச.கு.பா அவர்களுக்கு 07.10.1979 மணிவிழாவும், 14.05.1994 பொன்விழாவும் சங்கத்தினர்களாலும், அவர்தம் குடும்பத்தினர்களாலும் நடைப்பெற்றது. தனது 87 வயது வரை சங்கத்தின் முன்னேற்றத்திற்கும், சமுதாய மக்களின் ஒற்றுமைக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது பாடுப்பட்ட ச.கு.பா அவர்கள் 22.06.2006 நம்மை விட்டு பிரிந்தார்.

ச.கு.பா வின் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு நாமும் நமது சமுதாய மக்களின் முன்னற்றேத்திற்கும் வளர்ச்சிக்கும் சங்கத்தோடு சேர்ந்து நம்மால் முடிந்தவற்றை செய்ய முயல்வோம்.

ஜூலை 15ம் தேதி பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுத்தார். ஜூலை 18ஆம் தேதி 25000 ஏழைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

அன்று பகல் 12 மணிக்கு உணவு படைத்துக்கொண்டிருக்கும்போதே திடீரென சுகவீனம் அடைந்து, நம் செங்குந்த செம்மல் A.மாரிமுத்து செங்குந்தர் அவர்களை காலன் பிரித்துக்கொண்டுவிட்டான்.

அதை தெரிந்த சேலம் மாநகரமே அதிர்ச்சிக்குள்ளானது. பல்லாயிரக் கணக்கான மக்கள் சாரிசாரியாக வந்து கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தியதை இன்று நினைத்தாலும் உள்ளம் உருகும்,

அப்பெருந்தகையின் கனவை நனவாக்க சமூகப் பெரியோர்கள், பொன்விழாவும், மாநாடும் நடைபெறுகின்றபோதே செங்குந்தர் கல்வி நிறுவனமும் அமைத்து சேலத்தில் தொழில் கல்லூரி நிறுவியது பாராட்டுக்குரியது.

சாயச் சாலையாக்கி காலனியில் பெரிய கட்டிடம் கட்டி அதற்கு மாற்றினார்,

1957-ஆம் ஆண்டு சேலம் நகரத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப்பேரவை உறுப்பின ரானார். நெசவாளர் பிரதிநிதியாக பணியாற்றிய இவர் அகில இந்திய கைத்தறி வாரியத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நெசவாளர்களுக்குத் தேவையான அச்சு, பன்னை, தறி மிஷின், பேட்டுப் பெட்டி முதலியவைகளை முக்கால் பங்கு சர்க்கார் மான்யத்துடன் பெற்றுக் கொடுத்தார். கூட்டுறவு சங்கத்தில் பங்கு செலுத்தி உறுப்பினராகச் சேர முடியாத ஏழை நெசவாளர்களை நான்கு அணா மட்டும் செலுத்தினால் உறுப்பினராக சேர்த்து தறி கொடுத்து உதவினார்.

1961ல் சேலம் அம்மாப்பேட்டை யில் 25000 கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்றை நிறுவி நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப் பளித்து ஊருக்குப் பெருமை தேடித் தந்தார். மேலும் சேலம் ஆத்தூர் ரோடில் 25000. கதிர்கள் கொண்ட சேலம் டெக்ஸ்டைல்ஸ் என்ற நூற்பாலையையும் நிறுவினார். 1962ல் நெசவாளர் நிறைந்த வீர பாண்டி தொகுதியில் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டார்.

இப்படிச் சாதனைகள் பல புரிந்த பெருமகன் தான் பொறுப்பேற்ற சங்கத்தின் வளர்ச்சியிலே கொஞ்சமும் சலித்ததில்லை. நெசவாளர்களுக்கும் பிராவிடெண்ட் பண்டு திட்டத்தை கொடுக்க வேண்டும் என்று வாதாடி இந்தியாவிலேயே முதன்முதலாக அம்மாப்பேட்டை சங்க உறுப்பினர் களுக்குப் பெற்றுத்தந்தார்.

மேலும் சர்க்காரின் முழு உதவி யோடு 49 விசைத்தறிகளை பெற்று நிறுவியுள்ளார். ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களை உறுப் பினர்களாகச் சேர்த்து தறி கொடுத்து சங்கத்தை ஆலமரமாக வளர்த்தார். நெசவாளர்களின் வாழ்க்கைக்கு அவ்வப்போது ஏற்படும் செலவினங் களுக்கும், தொழில் முன்னேற்றத் திற்கும் உதவியாக இருக்கும் பொருட்டு அம்மாப்பேட்டை அர்பன் கூட்டுறவு வங்கி ஒன்றை நிறுவி தலைமை பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டார். தான் மறையும் போதும் தலைவராகவே மறைந்தார். அதுவும் ஆலமரமாக வளர்ந்து வருகிறது.

1975 அக்டோபர் 2ம் தேதி பெருந் தலைவர் காமராஜர் இறந்த பிறகு சேலம் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பேற்றார்.

நண்பர்கள் மூலமாக 7-6-1976ந் தேதி அம்மாப்பேட்டை அருள்மிகு செங்குந்தர் குமரகுரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முன் மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தலைமை யேற்று சொற்பொழிவாற்றும்போது நமது சமூகத்திற்காக பாலிடெக்னிக் ஒன்று ஏற்படுத்த வேண்டிய அவசர அவசியத்தைப்பற்றி தெளிவுபடுத்தி னார். அப்போது அக்கூட்டத்தில் இருந்த சமூகப் பெரியோர்கள் சிலர் நன்கொடை வழங்க உறுதி அளித்தார்கள்.

சமூகப் பெரியோர்களின் பெரும் ஒத்துழைப்போடு 1976ம் ஆண்டு

மலர்:19 இதழ்: 6
ஜூன் – 2019
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/-

செங்குந்த மித்திரன்

செங்குந்தர் குலச் செம்மல்

திரு. கு.மா.கோவிந்தராசனார் அவர்களின்

நூற்றாண்டு விழா (1919 - 2019)

மாநாடாகவும் நடைபெற்றது. மாநாடு நடந்த 2 நாட்களில் குடியேற்றம் நகரில் அனைத்து பகுதிகளிலும் சமுதாய மக்களுக்கும் உணவு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இம்மாநாட்டில் ஏறக்குறைய 6 இலட்சம் சமுதாய மக்கள் தமிழகம் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற குடியேற்ற நகரமன்ற தேர்தலில் பொது வாக்கெடுப்பின் மூலம் தனது மருமகள் திருமதி.திலவகதி இராஜேந்திரன் அவர்களை வெற்றி பெற செய்துச் தமிழகத்தின் மிகச்சிறந்த நகரமன்றத் தலைவர் என்ற விருதினை பெறுவதற்கு வழி காட்டினார்.

நிறைவுரை

மண்ணுலகில் எவ்வளவோ பேர் பிறக்கிறார்கள், அவருள் சிலர் மட்டுமே காலத்தை வென்று காவியமாய் மக்கள் நெஞ்சில் நிலைத்து வாழ்கிறார்கள். அத்தகையவருள் குடியேற்றத்து கல்வி வள்ளலாம், கு.மா.கோவிந்தராசனாரின் புகழ் ஆண்டுகள் பல கடந்தாலும், இக்கல்வி நிறுவனங்கள் என்றென்றும் அவர் புகழைப் பாடிக்கொண்டே இருக்கும்.

-புலவர் **தமிழ்.திருமால்,**

எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,